தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value: 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

A Comparative Study of the Case System in Tamil and Bengali

Shanmugapriya R,
Ph.D Research Scholar, Department of Tamil,
Central University of Tamilnadu, Thiruvarur-610001,
Email: Shanmukavi97@gmail.com

Abstract: *The significance of language studies is increasingly recognized across the world today, leading to extensive research in this field. Tamil, one of the most ancient languages of the Indian subcontinent, has influenced and interacted with several other Indian languages over time. A comparative study of these interactions helps trace the historical and structural relationships between languages during their stages of origin and development. Historically, Bengal has shared longstanding connections with the Tamil-speaking community through trade, politics, spirituality, art, and literature. These interactions have left noticeable imprints on both languages. Despite belonging to two distinct language families-Tamil to the Dravidian and Bengali to the Indo-Aryan- this article undertakes a comparative grammatical analysis to explore possible similarities in their linguistic dynamics. Specifically, it examines the structure and function of case system in Tamil and Bengali, focusing on their forms, types, distribution, methods of formation, and semantic variations.*

Key Words: *Comparative Grammar, Case System, Dravidian and Indo-Aryan Languages, Language Contact.*

ஒப்பீட்டு நோக்கில் தமிழ் வங்காள வேற்றுமை இலக்கணம்

சண்முகப்பிரியா . இரா,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
Shanmukavi97@gmail.com

சுருக்கம்: மொழி ஆய்வுகளின் முக்கியத்துவம் இன்று உலகெங்கிலும் அதிகரித்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது, இதன் விளைவாக இத்துறையில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ், காலப்போக்கில் பல இந்திய மொழிகளுடன் தாக்கத்தையும் தொடர்புகளையும் ஏற்படுத்தி வந்துள்ளது. இந்தத் தொடர்புகளின் ஒப்பீட்டு ஆய்வு, மொழிகளுக்கிடையே உள்ள வரலாற்று மற்றும் கட்டமைப்பு ரீதியான உறவுகளை அவற்றின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலைகளில் கண்டறிய உதவுகிறது. வரலாற்று ரீதியாக, வங்காளம் தமிழ் பேசும் சமூகத்துடன் வணிகம், அரசியல், ஆன்மிகம், கலை மற்றும் இலக்கியம் வழியாக நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்புகள் இரு மொழிகளிலும் குறிப்பிடத்தக்க தடயங்களை விட்டுச்சென்றுள்ளன. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தையும், வங்காளம் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தையும் சார்ந்த இரு தனித்த மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை என்ற போதிலும், அவற்றின் மொழியியல் இயக்கவியலில் சாத்தியமான ஒற்றுமைகளை ஆராய இந்தக் கட்டுரை ஓர் ஒப்பீட்டு இலக்கணப் பகுப்பாய்வை மேற்கொள்கிறது. குறிப்பாக, இது தமிழ் மற்றும் வங்காள மொழிகளில் உள்ள வேற்றுமை உருபு அமைப்பின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை, அவற்றின் வடிவங்கள், வகைகள், பரவல், உருவாக்கும் முறைகள் மற்றும் பொருண்ம மாற்றங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி ஆய்வு செய்கிறது.

முக்கிய சொற்கள்: ஒப்பீட்டு இலக்கணம், வேற்றுமை உருபு அமைப்பு, திராவிட மற்றும் இந்தோ-ஆரிய மொழிகள், மொழித் தொடர்பு

முன்னுரை:

மொழி ஆய்வுகளின் தேவை இன்று உலகெங்கிலும் உணரப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் தொன்மையான மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி உள்ளது. இத்தகு தொன்மையும், தொடர்ச்சியும் உடைய தமிழ்மொழியின் தாக்கமும், உறவும் இந்திய மொழிகள் பலவற்றிலும் உள்ளது. இந்த உறவுகளை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் மொழிகளின் தோற்ற, வளர்ச்சி நிலைகளில் அவற்றின் உறவுநிலைகளைக் குறித்து விளங்கிக் கொள்ளலாம்.

அவ்வகையில் பழங்காலத்திலிருந்து தமிழ்ச்சமூகத்துடன் வணிகம், அரசியல், ஆன்மீகம், கலை, இலக்கியம் போன்ற துறைகளில் தொடர்புடையது வங்காளம். இவ்விரு சமூகங்களில் உள்ள இவ்வுறவுகளின் தாக்கமானது அவர்களின் மொழிகளிலும் எதிரொலிப்பதைக் காணலாம். இந்த இரண்டு மொழிகளும் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவை. தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. வங்காளம் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சார்ந்தவையாக வகைப்படுத்தப்பட்டாலும் மொழி இயங்குநிலையில் இவற்றிடையே ஒற்றுமைகள் உள்ளனவா என்பதை ஆராயும்பொருட்டு தமிழ், வங்காள வேற்றுமை இலக்கணத்தை ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக, தமிழிலும் வங்காளமொழியிலும் உள்ள வேற்றுமை உருபுகள், அதன் வகைகள், வருகையிடங்கள், உருபேற்கும் முறைகள் மற்றும் பொருள் மாற்றங்கள் ஆகிய தொழிற்பாடுகளின் ஒத்திசைவை இக்கட்டுரை ஆராய்கிறது.

வேற்றுமை:

ஒரு வாக்கியத்தில் பெயருக்கும் வினைக்கும், இடையிலான இலக்கண உறவினை வேறுபடுத்துவதன்வழி அவ்வாக்கியத்தின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை ஆகும். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை என்று இலக்கண ஆசிரியர்கள் பொருளுரைக்கின்றனர்.

“ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள்

வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை” (நன்.சொ.291)

என்று நன்னூலார் வேற்றுமைக்கு இலக்கணம் கூறுகின்றார்.

இதனை தெய்வச்சிலையார், “ஒரு பொருளை ஒருகால் வினைமுதல் ஆக்கியும், ஒருகால் செயப்படுபொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பதாக்கியும், ஒருகால் நீங்க நிற்பதாக்கியும், ஒருகால் உடையதாக்கியும், ஒருகால் இடமாக்கியும் வேறுபடுத்தலின் வேற்றுமை” என்று விளக்குகிறார். (1984:48) தற்கால மொழியியலாளர்கள் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை எனும் விளக்கத்தை ஏற்பதில்லை. வேற்றுமையுருபை ஏற்பதனால் ஒரு பெயரின் சொற்பொருளில் மாற்றம் ஏற்படுவதில்லை. மாறாக அதன் இலக்கணப் பொருளே மாற்றமடைகிறது என்பது அவர்தம் கருத்தாகும். அதாவது, “ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லை வினைமுற்றோடு தொடர்புபடுத்துகிற அளவிலேயே வேற்றுமை அமைகிறது” என்கின்றனர்.

(கு.பரமசிவம்: 2017,123) இது தெய்வச்சிலையாரின் கருத்துடன் ஒத்து வருவதைக் காண முடிகிறது. இவற்றின்வழி ஒரு பெயர்ச்சொல்லின் இலக்கணப்பொருளை வேறுபடுத்திக் காட்டுவதே வேற்றுமை என்பதாகக் கொள்ளலாம்.

வேற்றுமை வகைகள்:

தமிழ்:

தமிழிலும் வங்காளத்திலும் வேற்றுமைகள் இத்தனை என வரையறுத்துச் சொல்வதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர்,

"வேற்றுமை தாமே ஏழென மொழிப" (தொ.சொ.62)

என்று வேற்றுமை குறித்த தமது முந்தைய மரபின் கருத்தாகக் கூறுவதாலும் பின்,

"விளி கொள்வதன்கண் விளியோ டெட்டே" (தொ.சொ.63)

என்று விளியையும் சேர்த்து அதனைத் தனியோர் இயலில் விரிவாக விளக்கியுள்ளதாலும் தொல்காப்பியருக்கு முந்தைய இலக்கண நூலார் விளி வேற்றுமைக்கு ஏனைய வேற்றுமைகளோடு ஒத்த நிலையினை அளிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

தொல்காப்பியத்தைப் போலவே பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களான நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றவையும் வேற்றுமைகளை எட்டென வகைப்படுத்துகின்றன. கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் சுவாமிநாத தேசிகரால் இயற்றப்பட்ட இலக்கணக்கொத்து எனும் நூல்,

"வினைமுதல் வினையே செயப்படு பொருளே
கருவி கொள்வோன் நீக்கம் குறையே
இடமென எட்டும் வடமொழி வேற்றுமை
ஏழ்ஆறு என்று இயம்பும் தமிழ்நூல்" (இ.கொ.13)

என வடமொழி வேற்றுமைகள் எட்டு எனக்கூறி, தமிழ் இலக்கண மரபு வேற்றுமைகளை ஆறு எனவும், ஏழெனவும் வகுத்துக் கூறுவதாகக் கூறியுள்ளார். அதாவது எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையாதலால் அதனை விடுத்து, பெயர்ப்பொருளை வேறுபடுத்தும் ஏழும் வேற்றுமை எனவும், எழுவாயும் விளியும், பெயரும் பெயரினது திரிபுமாதலால் அவ்விரண்டையுமே விடுத்து ஏனைய ஆறும் வேற்றுமை எனவும் இருவேறு கருத்துகள் தமிழ் நூலாரிடையே காணப்படுவதாகக் கூறுகிறார்.

பிற்கால மொழி ஆய்வாளர்கள், தமிழ் இலக்கண நூல்கள் மூன்றாம் வேற்றுமையுள் அடக்கிக்கூறும் உடனிகழ்ச்சிப் பொருண்மையைத் தனியொரு வேற்றுமை வகையென சுட்டி வேற்றுமையை ஒன்பது வகைகளாகக் கூறுகின்றனர். (எம்.ஏ.நுஃமான்: 2017,95) இவ்வாறு தமிழ்

வேற்றுமையின் எண்ணிக்கை ஏழு, எட்டு, ஒன்பது என்று பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் தமிழ் வேற்றுமையின் வகைகளை எட்டு எனக் கொள்ளும் போக்கே தமிழ் இலக்கண வழக்கில் பெருவாரியாகக் காணப்படுகிறது.

வங்காளம்:

வங்காள இலக்கண மரபிலும் வேற்றுமையின் வகைகள் குறித்த வெவ்வேறு கருத்தியல்கள் இலக்கண ஆசிரியர்களிடம் காணப்படுகின்றன. வங்காள வேற்றுமைகள் சமஸ்கிருத மரபிலிருந்து வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகிறது.

தொடக்க காலத்தில் சமஸ்கிருத இலக்கண மரபே வங்காளத்திற்கான இலக்கண மரபாகப் பின்பற்றப்பட்டு வந்திருப்பதை ஈஸ்வரசந்திர வித்தியா சாகரின் 'வியாகரண் கௌமுதி' போன்ற இலக்கண நூல்களின்வழி அறிய முடிகிறது. ராஜாராம் மோகன்ராய் எழுதிய 'கௌடிய வியாகரணம்' எனும் நூலே வங்க மொழிக்கேயான முதல் இலக்கண நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலில் வங்காள வேற்றுமைகளை அவர் நான்காகக் வகைப்படுத்துகிறார். (In Bengalee, cases may be reduced to four; the nominative, accusative, locative and genitive- வங்காளத்தில் வேற்றுமைகளை எழுவாய் வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை, இட வேற்றுமை மற்றும் உடைமை வேற்றுமை என்று நான்காக சுருக்கிக் கொள்ளலாம்.) (1826: 20) "சமஸ்கிருத இலக்கணிகளைப் பின்பற்றி வங்காள வேற்றுமைகள் ஏழு வகையாக (விளி வேற்றுமையைச் சேர்த்து எட்டு வகையாக) பகுக்கின்றனர் என்று கூறும் சுனிதி குமார் சட்டர்ஜி நவீன வங்காள மொழியின் வேற்றுமைகளை ஆறாக வகைப்படுத்துகிறார். (1926:739) சில மொழியியல் அறிஞர்கள் வங்காள வேற்றுமைகளை ஏழாகவும் வகைப்படுத்துகின்றனர். ஆனால் உருபுகளின் அடிப்படையில் வங்காள வேற்றுமைகள் எட்டு வகைகளாக வகைப்படுத்தம் செய்யப்படுகின்றன.

தமிழ் – வங்காள வேற்றுமைகளும், உருபுகளும்:

வங்காளத்தில் வேற்றுமை 'காரக்' (কারক) என்றும், வேற்றுமை உருபு 'விபக்தி' (**বিভক্তি**) என்றும் அழைக்கப்படுகின்றன. தமிழில் வேற்றுமைகளை முதல், இரண்டு, மூன்று என்று எண் அடிப்படையில் சுட்டும் வழக்கம் காணப்படுகிறது. வங்காளத்தில் வேற்றுமைகளை அவற்றின் உருபுகளின் பெயரால் சுட்டும் வழக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. எண், உருபு, பொருண்மை என்ற மூன்று அடிப்படைகளிலும் தமிழ், வங்காள வேற்றுமைகள் வகைப்படுத்தப்பட்டாலும் இக்கட்டுரை தமிழில் அமைவதால் தமிழின் பெருவழக்காக அமையும் எண் அடிப்படையே இங்கு பின்பற்றப்படுகிறது.

முதல் வேற்றுமை (Nominative case):

தமிழில் முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" (தொ.சொ.548) என தொல்காப்பியம் முதல் வேற்றுமையின் அமைப்பைக் கூறுகிறது. முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. உருபு ஏற்காத பெயர்ச்சொல்லே எழுவாயாகச் செயல்படுகின்றது. திரிபு இல்லாத பெயரே எழுவாயென நன்னூல் முதல் வேற்றுமையின் இயல்பைக் கூறுகிறது.

பொருளைச் சுட்டும் சொற்கள் யாவும் 'பெயர்' என்பதும், அப்பொருளின் இயல்பினையும், புடைப்பெயர்ச்சியையும் சுட்டும் சொற்கள் யாவும் 'வினை' என்பதும் தமிழிலக்கணமாகும். "அங்ஙனம் ஒருபொருளைச் சுட்டி அதுபற்றிச் செப்பும் வினாவும் நிகழ்த்துங்கால் பன்னூறு வகையான பொருள்களினின்று அப்பொருள் பிரிக்கப்பட்டுத் தலைமை பெறுதலின் அஃது எழுவாயாக ஆகின்றது. அங்ஙனம் பிரித்தலால் தனிமைப்படும் நிலைமையே அஃது எய்தும் வேறுபாடாகும். அவ்வேறுபாடு அடிப்படையாதலின் அங்ஙனம் பெயர்தோன்றி நிற்கும் நிலையை முதல் வேற்றுமை எனத் தொல்லாசிரியர் வகுத்தனர். அஃது உருபினான் வேறுபடாமை நோக்கி அல்வழியுள் அடக்கினர்" (பாவலரேறு ச.பாலசுந்தரம்: 2012) என எழுவாய் வேற்றுமை திரிபு பெறாமல் இயங்கும் நிலையில் அதனை வேற்றுமை என்று வகைப்படுத்துவதின் தர்க்கம் பெறப்படுகிறது

(எ-டு):

கண்ணன் வந்தான்

வங்காளத்தில் எழுவாய் வேற்றுமை 'கர்த்ரு காரக்' என்றழைக்கப்படுகிறது. எண்ணிக்கை அடிப்படையில் இதனை 'ப்ரதம காரக்' என்கின்றனர். பழைய வங்காளத்தில் எழுவாய் வேற்றுமை உருபு பெற்றும், பெறாமலும் என இருவகைத்தாகவும் அமையப்பெற்றன. தற்கால வங்காளத்தில் பெரும்பான்மை உருபு பெறாத பெயர்ச்சொற்களே எழுவாயாக அமைகின்றன. திரிபு இல்லாத பெயர்ச்சொல் வடிவமே வங்காள மொழியில் கர்த்ரு காரக் எனப்படுகிறது. (The Original Form of a noun is used in Bengalee, is denoting the nominative case, Rammohun Roy: 1826, 21)

(எ-டு):

শঙ্কর খেলেছে (**சங்கர்** கேல்ச்சே) - **சங்கர்** விளையாடுகிறான்.

இவற்றிலிருந்து தமிழிலும், வங்காளத்திலும் எழுவாய் வேற்றுமையானது திரிபு இல்லாத பெயரைக் கொண்டு அமைவதைக் காண முடிகிறது.

இரண்டாம் வேற்றுமை (Accusative case):

இரண்டாம் வேற்றுமை தமிழில் செயப்படுபொருள் வேற்றுமை என்றழைக்கப்படுகிறது. வினைமுதல் செய்யும் தொழிலின் பயனையுறுவது செயப்படுபொருளாகும்.

" எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு

அவ்விரு முதலின் தோன்றும் அதுவே" (தொ.சொ.554) என்று தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமை அமைந்துவரும் முறையைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் வேற்றுமை உருபாக -ஐ உருபு கூறப்படுகிறது.

(எ-டு):

நான் **அவனைப்** பார்த்தேன்

வங்காளத்தில் இரண்டாம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் 'த்வித்திய காரக்' என்றும், பொருண்மை சார்ந்து 'கர்ம காரக்' என்றும் அழைக்கப்படுகிறது. புலனியக்கமாகவோ கருத்துருவமாகவோ ஓர் எழுவாயால் செய்யப்படும் செயலின் பயனையுறுவது கர்ம காரக் எனப்படுகிறது.

(The accusative denotes that the noun in that form is the object to which an action passes on either really or metaphorically, from another noun in the nominative form, Rammohun Roy: 1826, 21) இதன் உருபு -கே / **কে** (-ke) ஆகும்.

(எ-டு):

আমি **তাকে** দেখেলাম (அமி **தாக்கே** தேக்லாம்) –நான் **அவனைப்** பார்த்தேன்.

உருபு தொக்கி நிற்றல்:

தமிழில் பெரும்பாலும் இரண்டாம் வேற்றுமையானது தொகையாக வருகை தரும்.

(எ-டு): நான் **பழம்** வாங்கினேன்

போலவே வங்காளத்திலும் இரண்டாம் வேற்றுமை பெரும்பாலும் தொகையாக இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

(எ-டு.):

গাছ **ফুল** দিয়েছে (காச் ஃபூல் தியேச்சே) மரம் பூ கொடுத்தது.

அஃறிணையில் உருபு பெறாமை:

தமிழில் இரண்டாம் வேற்றுமையானது உயர்திணையில் பயின்று வருகையில் உருபு பெற்றும், அஃறிணையில் உருபு பெற்றும் பெறாமலும் வரும். வங்காள மொழியிலும் வேற்றுமை அமைப்பில் இம்முறையைக் காணமுடிகிறது. (This mark **কে** very often omitted in nouns signifying vegetating objects, and especially those which are destitute both of animal and vegetable life, Rammohun Roy: 1826, 22)

(எ-டு):

আমি ভাত খাই(அமி பாத் காஇ) - நான் சோறு சாப்பிடுகிறேன் – அஃறிணை- உருபு பெறாமை

আমি তোমা-**কে** ভালোবাসি (அமி தொமாகே பாலோபாசி) - நான் உன்னைக் காதலிக்கிறேன் - உயர்திணை- உருபு பெறுதல்

செயப்படுபொருள் வேற்றுமையானது தமிழிலும், வங்காளத்திலும் வினையின் பயனுக்கு உட்படும் வடிவமாக, உருபு பெறும் முறையில் நெகிழ்வுத்தன்மையுடனும் பயின்று வருகின்றன.

மூன்றாம் வேற்றுமை (Instrumental case):

மூன்றாம் வேற்றுமையானது தமிழில் கருவி வேற்றுமை எனப்படுகிறது. ஒரு தொடரில் ஒரு பெயர்ச்சொல்லானது வினை நிகழ்வதற்குரிய கருவியாக அல்லது கருத்தாவாகச் செயல்படுவதைக் காட்டக்கூடியது கருவி வேற்றுமை ஆகும்.

"ஒடு எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி

வினை முதல் கருவி அனை முதற்றதுவே" (தொ.சொ.557)

எனத் தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமையை 'ஒடு எனப் பெயரியது' எனக் குறிப்பிடுகிறது. நன்னூல் இதனோடு -ஆல், -ஆன், -ஓடு என்பனவற்றையும் இணைத்து மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகிறது. தற்காலத்தில் -கொண்டு, -மூலம் ஆகிய சொல்லுருபுகளும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(உ-ம்):

மனத்தொடு வாய்மை

தூரிகையால் வரைந்தாள்.

வங்காளத்தில் மூன்றாம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் 'த்ரித்திய காரக்' என்றும் பொருண்மை சார்ந்து 'கர்ண காரக்' என்றும் அழைக்கப்படுகிறது. நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு வினை நிகழ்வதற்குரிய பெயராகவும், கருவியாகவும் செயல்படக்கூடியது கர்ண காரக் எனப்படுகிறது. (The Instrument employed by an Agent in effecting an accident either active or neuter, Rammohun Roy: 1826,24) வங்காளத்தில் மூன்றாம் வேற்றுமை உருபானது அது இடம்பெறும் பெயரைப் பொறுத்து மாறுபட்டு அமையக்கூடியது. அதாவது உருபு ஏற்கும் பெயரானது அஃறிணை எனில் -தியே (**দিয়ে**) எனும் உருபும், உயர்திணை எனில் -த்வாரா (**দ্বারা**) எனும் உருபும் இடம்பெறும். சில நேரங்களில் இவை மாறியும் அமைகிறது.

(எ-டு):

আমি পেনে-**দিয়ে** লিখছি (அமி பென் தியே லிக்ச்சி) - நான் **பேனாவால்** எழுதுகிறேன்.

আমি তার-**দ্বারা** এই কাজটা করছি (நான் அவனைக்கொண்டு இந்த வேலையைச் செய்தேன்)

இவ்வாறு வினை நிகழ்வதற்குரிய கருவியாகவும், கருத்தாவாகவும் செயற்படும் பெயர்ச்சொற்கள் மூன்றாம் வேற்றுமையாகத் தமிழ் மற்றும் வங்காள மொழிகளில் தொழிற்படுகின்றன.

நான்காம் வேற்றுமை (Dative case):

நான்காம் வேற்றுமை தமிழில் கொடை வேற்றுமை எனப்படுகிறது. கொடைப்பொருள் இவ்வேற்றுமையின் முக்கியப்பொருளாதலின் இப்பெயர் பெற்றது. தொல்காப்பியர் நான்காம் வேற்றுமையை -கு என்றும், அது "எப்பொருளாயினும் கொள்ளும்" (தொ.சொ.559) என்றும் கூறுகிறார்.

(எ-டு): **அவனுக்குக்** கொடுத்தேன்.

வங்காளத்தில் நான்காம் வேற்றுமையானது எண்ணிக்கை அடிப்படையில் 'சதுர்த்தி காரக்' என்றும் , பொருண்மை சார்ந்து ' சம்பிரதான் காரக்' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் உருபு -கே (**কে**) ஆகும். ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடையாகவோ, பரிமாற்றமாகவோ வழங்குவதைக் குறிப்பது சம்பிரதான் காரக் எனப்படுகிறது. வங்காளத்தில் இவ்வேற்றுமையில் -கே உருபு கட்டாயம் இடம்பெறும். தொகையாக வருவதில்லை. (The Dative case is used with a verb implying a gift or transfer to some person, W.S. Milne:1913,306)

(எ-டு):

রাজা **রানীকে** উপহার দিয়েছেন। (ராஜா **ராணிகே** உபஹார் தியேச்சேன்) – ராஜா **ராணிக்குப்** பரிசு கொடுத்தார்.

இங்கு கவனிக்கத்தக்க விடயமாக இருப்பது இரண்டாம் வேற்றுமை உருபான -கே (**কে**) /-ke/ எனும் உருபே கொடை வேற்றுமைக்கும் பயின்றுவருகிறது. கால்டுவெல் தமிழில் காணப்படும் -கு எனும் கொடை வேற்றுமை உருபானது அதே பொருண்மையில் வங்காளத்தில் -கே என்று அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். ஆர்.ஜி.பந்தர்க்கர் உள்ளிட்டோர் திராவிட மொழிகள் ஆரிய மொழிகளில் தாக்கம் ஏற்படுத்தியிருக்கக்கூடுமா என்ற ஐயம் கொண்டிருந்தபோது அதற்கான மறுப்புகளும் மொழியாய்வில் முன்னெடுக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும். ஒரிய மொழியில் -கு உருபானது தமிழில் பயன்படுத்தப்படும் அதே பொருண்மையில் பயின்று வருவதாக பிஜொய் சந்திர மஜும்தார் குறிப்பிடுகிறார். திராவிட மொழிகளில் காணப்படும் கொடை வேற்றுமை உருபானது ஆரிய மொழிகள் சிலவற்றுள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். (1927:74) இவ்வகையில் வங்காளத்தின் நான்காம் வேற்றுமை உருபு குறித்தான தனித்த ஆய்வு தேவைப்படுகின்றது.

ஐந்தாம் வேற்றுமை (Ablative case):

இதனை நீங்கல் வேற்றுமை என்று கூறுவர். ‘இதனின் இற்று இது’ (தொ.சொ.561) என தொல்காப்பியம் ஐந்தாம் வேற்றுமை குறித்துக் கூறுகிறது. இதன் உருபு /-இன்/ ஆகும். நன்னூலார் /-இன்/, /-இல்/ ஆகிய இரு வடிவங்களைக் கூறி, பொருள்தளத்தில் நீங்கல் பொருளுக்கு முதலிடம் அளித்துள்ளார்.

-நின்று, -இருந்து போன்ற சொல்லுருபுகள் நீங்கல் பொருளில் பயின்று வருகின்றன.

(எ-டு): காக்கையின் கரிது

வங்காளத்தில் ஐந்தாம் வேற்றுமை ‘அபதான் காரக்’ எனப்படுகிறது. இதன் உருபு -தேக்கே (/-theke/ ஆகும். ஓர் இடத்திலிருந்தோ, பொருளிலிருந்தோ அல்லது நபரிடமிருந்தோ நீங்கப்படும் அல்லது பெறப்படும் பெயரைக் குறிப்பது அபதான் காரக் எனப்படுகிறது. (The ablative case indicates the person, thing or place from which the subject is removed or obtained, W.S. Milne:1913,307)

(எ-டு):

আমি মাদুরাই **থেকে** চেন্নাই যাচ্ছি। (அமி மதுரை **தேக்கே** சென்னை ஜாச்சி)

நான் மதுரையில் இருந்து சென்னைக்குப் போகிறேன்.

இவ்வாறு தமிழிலும், வங்காளத்திலும் நீங்கல் பொருளில் அமையப்பெறும் பெயரின் தன்மையைக் குறிப்பதாக ஐந்தாம் வேற்றுமை அமைகிறது.

ஆறாம் வேற்றுமை (Genitive case):

இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையே உள்ள உறவைச் சுட்டி நிற்கும் ஆறாம் வேற்றுமையானது உடைமை வேற்றுமை எனப்படுகிறது.

“தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்

அன்ன கிளவிக் கிழமைத் ததுவே”

என தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமையின் இயல்புகளைக் குறிப்பிடுகிறது. இதன் உருபு /-அது/ ஆகும்.

(எ-டு):

எனது வீடு

வங்காளத்தில் உடைமை வேற்றுமையானது ‘சம்பந்த காரக்’ என்று அழைக்கப்படுகிறது. இதன் உருபு /-ர்/ (**র**) ஆகும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு வாக்கியத்தில் பயின்றுவரும் இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையிலான உறவைக் குறிப்பது சம்பந்த காரக் எனப்படுகிறது. (The

Genitive case denotes a noun having a direct or indirect relation to some other noun in the sentence, Rammohun Roy: 1826, 23)

(எ-டு):

রাজার বাড়ি। (ராஜார் பாரி)- ராஜாவின் வீடு.

অজয়ের বাবা। (அஜயேர் பாபா) -அஜயின் அப்பா.

இவ்வாறு ஆறாம் வேற்றுமையானது தமிழிலும், வங்காளத்திலும் பெயர்ச்சொற்களுக்கு இடையிலான உறவு நிலைகளைக் குறித்து நிற்கிறது.

ஏழாம் வேற்றுமை (locative case):

இது இட வேற்றுமை எனப்படுகிறது.

"கண் எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி

வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின்

அனை வகைக் குறிப்பின் தோன்றும் அதுவே" (தொ.சொ.565)

என வினை செய்யும் இடம், நிலம், காலம் என்ற மூன்று வகைக் குறிப்பின் அடிப்படையில் இடவேற்றுமை தோன்றும் என்பதாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

(எ-டு):

போரின்கண் -வினை நிகழ்வு

போர்க்களத்தின்கண் – நிலம்

போர்க் காலத்தின்கண் – காலம்

தொல்காப்பியம் கண் முதலாக இடம் ஈறாக பதினெட்டு உருபுகளையும், அத்தன்மையன பிறவற்றையும் ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கூறுகிறது. /-இல்/, /-இடம்/ எனும் இரண்டும் தற்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் உருபுகளாக உள்ளன.

(எ-டு):

அப்பா **வீட்டில்** இருக்கிறார்

கண்ணனிடம் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன.

வங்காளத்தில் இட வேற்றுமையானது அதிகரண் காரக் என்று அழைக்கப்படுகிறது. வாக்கியத்தில் ஒரு செயல் அல்லது நிகழ்வு நடைபெற்ற இடத்தைக் குறிப்பதற்கான பெயர்ச்சொல்லின் வடிவமாக அதிகரண் காரக் வழங்கப்படுகிறது. (The Locative case denotes that the noun in that form expresses the location where the action or event referred to in the sentence takes place, Rammohun Roy: 1826, 23) வங்காளத்தில் அதிகரண் வேற்றுமையில் உருபு ஏற்கும்

சொல் உயிர் எழுத்தைக் கொண்டு முடியும்போது -தே **(তে)** எனும் உருபையும், மெய்யெழுத்தில் முடியும்போது **/-e/** எனும் உருபையும் பெறுகிறது.

(எ-டு):

সে **বাড়িতে** আছে (சே **பாரிதே** ஆச்சே) - அவன் **வீட்டில்** இருக்கிறான்

আমি **তিরুবারুরে** আছি (அமி **திருவாரூரே** ஆச்சி)- நான் **திருவாரூரில்** இருக்கிறேன்.

இவ்வாறு வங்காளத்தில் இட வேற்றுமை உருபானது அது இடம்பெறும் சொல்லின் கடைசி எழுத்தைப் பொறுத்து மாற்றமடைகிறது.

எட்டாம் வேற்றுமை (vocative case):

விளி வேற்றுமையானது தமிழில் எட்டாம் வேற்றுமையாகக் கொள்ளப்படுகிறது. வங்காளத்தில் ஏழு வேற்றுமைகளே குறிப்பிடப்படுகிறது. தமிழில் "விளி கொள்வதன் கண் விளியோடு எட்டே" (தொ.சொ.547) என்று தொல்காப்பியம் குறிப்பிடுவது போன்றே வங்காளத்திலும் விளி வேற்றுமையானது இறுதியில் தனியொரு வேற்றுமையாகச் சொல்லப்படுகிறது.

(எ-டு)

ওহে, শত্রু! (ஒஹே, சத்ரு!)- ஏய், பகைவனே!

நிறைவாக:

தமிழ் மற்றும் வங்காள வேற்றுமைகளை ஒப்பிட்டதின்வழி இவ்விரு வேற்றுமை இலக்கண அமைப்பு முறையிலும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் அமைந்திருப்பதை அறிய முடிகிறது. எண் வரிசை அடிப்படையிலும், வேற்றுமைப்பொருண்மை அடிப்படையிலும் வேற்றுமைகளுக்கு பெயரிடும் முறை இரு மொழிகளிலும் ஒத்துக் காணப்படுகிறது. வங்காளத்தின் நான்காம் வேற்றுமை உருபான -கே எனும் உருபு தமிழின் -கு உருபைப் போன்றே கொடை வேற்றுமைப் பொருண்மையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுவது போன்றே ஏழு வேற்றுமைகளை முதலில் கூறி விளி வேற்றுமையை எட்டாவதாகக் கூறும் போக்கு வங்காளத்திலும் அமைந்துள்ளது. இரண்டாம் வேற்றுமையைப் பொறுத்தவரை திணை அடிப்படையில் உருபு இடம் பெறும் நெகிழ்வுத்தன்மை வங்காளத்திலும் அவ்வாறே அமையப்பெற்றுள்ளது. தமிழ் வேற்றுமைத் தொகை அமைப்பைப் போலவே வங்காள வேற்றுமைகளும் வாக்கியத்தில் தொகைகளாக இடம்பெற்று அமைகின்றன.

இவ்வாறு தமிழ் வங்காள வேற்றுமைகளுக்கு இடையே பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வொற்றுமைக்கான காரணங்களை நவீன மொழியியல் அடிப்படையில்

ஆராயும்போது மேலும் பல உண்மைகளை வெளிக்கொணர முடியும். அதற்கு இவ்வாய்வுக்கட்டுரை ஒரு தொடக்கமாக அமைகிறது.

துணைநின்ற நூல்கள்:

1. சங்கரேஸ்வரி.பா., தமிழ் சமஸ்கிருத இலக்கண மரபுகள், பாவை பதிப்பகம், சென்னை- 2015.
2. சுப்பிரமணியன்.ச.வே (ப.ஆ.)., தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், 2013 (மூ.ப.)
3. சுப்பிரமணியன். ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2016
4. தாமோதரன்.ஆ (ப.ஆ.)., பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் விருத்தியுரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
5. நுஃமான்.எம்.ஏ., அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம் பதிப்பகம், திருச்சி- 2017 (மூ.ப.)
6. பரமசிவம்.கு., இக்காலத் தமிழ் மரபு, அடையாளம் பதிப்பகம், திருச்சி- 2017
7. பாலசுந்தரம்.ச. பாவலரேறு (உ.ஆ.)., தொல்காப்பியம் தொகுதி-2, சொல்லதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2022.
8. Bijaychandra Mazumdar, The History of the Bengali language, Calcutta university press, 1927 (Second Edition).
9. Kothandaraman.Pon., A Grammar of Contemporary Literary Tamil, International Institute of Tamil Studies, Chennai- 1997.
10. Milne.W.S., A Practical Bengali Grammar, Cotton press, Calcutta-1913.
11. Rammohun roy., Bengalee Grammar in the English Langugae, Unitarian press, Calcutta- 1826.
12. Suniti Kumar Chatterji., The Origin and Development of The Bengali Language, Part II: Morphology, Bengali Index, Calcutta university press, 1926.

References

1. Balasundaram Pavalareru, S. (Annot.). (2022). *Tholkaappiyam (Vol. 2): Sollathikaram—Research commentary*. Periyar University, Salem.
2. Chatterji, S. K. (1926). *The origin and development of the Bengali language, Part II: Morphology, Bengali Index*. Calcutta University Press.
3. Kothandaraman, P. (1997). *A grammar of contemporary literary Tamil*. International Institute of Tamil Studies, Chennai.
4. Mazumdar, B. (1927). *The history of the Bengali language* (2nd ed.). Calcutta University Press.
5. Milne, W. S. (1913). *A practical Bengali grammar*. Cotton Press, Calcutta.
6. Nuhman, M. A. (2017). *Basic Tamil grammar* (3rd ed.). Adaiyalam Pathippagam, Tiruchy.
7. Paramasivam, K. (2017). *Contemporary Tamil tradition*. Adaiyalam Pathippagam, Tiruchy.
8. Roy, R. (1826). *Bengalee grammar in the English language*. Unitarian Press, Calcutta.
9. Sankareswari, P. (2015). *Tamil and Sanskrit grammatical traditions*. Pavai Pathippagam, Chennai.
10. Subramanian, S. V. (Ed.). (2013). *Tamil grammatical works* (3rd ed.). Meyyappan Pathippagam.
11. Subramanian, S. V. (2016). *Tholkaappiyam: A clear commentary*. Manivasagar Pathippagam, Chennai.
12. Thamotharan, A. (Ed.). (1999). *Nannul: Text and elaborate commentary* (Original work by Pavananthi Munivar). International Institute of Tamil Studies, Chennai.

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.